# நாகப்பட்டினம் நகராட்சி

# நிர்வாக அறிக்கை

# 2023–2024 ஆம் நிதியாண்டு

மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார் – குறள்

**நாகப்பட்டினம் நகராட்சி**

**நிர்வாக அறிக்கை 2023–2024**

**நிர்வாக அமைப்பு**

**ஆட்சி எல்லை**

வரலாற்று புகழ் பெற்றதும் கடற்கரை நகரமாகிய நாகப்பட்டினம் நகராட்சி 24.10.1866 ஆம் நாள் துவக்கப்பட்டு 24.10.1986 ஆம் தேதியில், முதல்நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது. 22.05.1998 ஆம் தேதி நாளிட்ட நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண் 85 இன் படி இந்நகராட்சி தேர்வு நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பெற்று, தொடர்ந்து தேர்வு நிலை நகராட்சியாக இயங்கி வருகிறது. இந்நகராட்சியின் எல்லைக்குள் நாகப்பட்டினம், நாகூர் ஆகிய இரண்டு நகரங்கள் முழுவதும் உள்ளது. இதன் எல்லைக்குள் நாகப்பட்டினம், நாகூர், அந்தனப்பேட்டை ஆகிய மூன்று வருவாய் கிராமங்கள் உள்ளன. ஒருங்கிணைந்த தஞ்சாவூர் மாவட்டத்தை நாகப்பட்டினம் மாவட்டம் மற்றும் தஞ்சாவூர் மாவட்டம் என இரண்டாக பிரிக்கப்பட்டு 19.10.1991 முதல் நாகப்பட்டினத்தை மாவட்ட தலைநகராகக் கொண்டு செயல்பட்டு வந்தது. இதன் பிற'கு நாகப்பட்டினம் மாவட்டம் 01.01.1997 முதல் திருவாரூர் மாவட்டம் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டம் என இரண்டாக பிரிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

| | | |
|---|---|---|
| இந்நகராட்சியின் எல்லையின் மொத்த பரப்பளவு | : | 14.92.92 ச.கி.மீ |
| 1991 ஆம் ஆண்டு மக்கள் தொகை | : | 86565 |
| 2001 ஆம் ஆண்டு மக்கள் தொகை | : | 93148 |
| 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை | : | 102905 |

**நகர்மன்றம்**

தமிழ்நாடு தேர்தல் ஆணைய எஸ்.ஓ.எண்.5/2022TNSCE/ME/1, நாள்: 26.01.2022 ஆம் தேதி கடிதத்தின்படி, நகர்மன்ற தேர்தல் 19.02.2022ஆம் தேதி நடைபெற்றது. நாகப்பட்டினம் நகராட் சியில் 36 நகர்மன்ற உறுப்பினர்கள் 22.02.2022ஆம் தேதி பதவி ஏற்றனர். 04.03.2022 ஆம் தேதி நடைப்பெற்ற நகர்மன்ற தலைவருக்கான தேர்தலில் திரு. இரா.மாரிமுத்து, நகர்மன்றத் தலைவராகவும், திரு. எம்.ஆர். செந்தில்குமார் நகர்மன்ற துணைத்தலைவராகவும், மன்ற உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

அறிக்கையாண்டில் வரிமேல் முறையீடு குழு உறுப்பினராக 4 உறுப்பினர்களையும், ஒப்பந்தக்குழு உறுப்பினராக 1 உறுப்பினரையும், நியமனக்குழு உறுப்பினராக 1 உறுப்பினரும், தேர்வு செய்யப்பட்டார்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட குழு உறுப்பினர்கள் 31.03.2022 ஆம் தேதி அன்று குழு உறுப்பினர்களாகவும் பதவி ஏற்றனர்.

| வ.எண் | பெயர் திருவாளர்கள் | வார்டு எண் |
|---|---|---|
| 1 | இரா. மாரிமுத்து நகர்மன்ற தலைவர் | 30 |
| 2 | எம். செந்தில்குமார் நகர்மன்ற துறைத் தலைவர் | 7 |
| நகர்மன்ற உறுப்பினர்கள் திருவாளர்கள் | | |
| 1 | ஜி. திவ்யா | 1 |
| 2 | செ. பதுருநிஷா | 2 |
| 3 | உ. முகம்மது ஷேக்தாவுது | 3 |
| 4 | நா. அஞ்சலி தேவி | 4 |
| 5 | ஹ. முகமது கபீர் | 5 |
| 6 | பா. வனிதா | 6 |
| 7 | மா. தியாகராஜன் | 8 |
| 8 | ஜ. ஆசிக்ஹமீது | 9 |
| 9 | வி. ரேவதி | 10 |
| 10 | மோ. அமுதா | 11 |
| 11 | த. செந்தில்குமார் | 12 |
| 12 | சு. கௌதமன் | 13 |
| 13 | எம். ஜீலைகா பீவி | 14 |
| 14 | கு. ஜோதி லெட்சுமி | 15 |
| 15 | சு. சுரேஷ் | 16 |
| 16 | பா.திலகர் | 17 |
| 17 | சு. சுபஸ்ரீ | 18 |
| 18 | த. செல்வராணி | 19 |
| 19 | க. சுந்தரேஸ்வரி | 20 |
| 20 | எஸ். ஷோபனா | 21 |
| 21 | தே. மணிகண்டன் | 22 |
| 22 | பா. கலா | 23 |
| 23 | ர. முகுந்தன் | 24 |
| 24 | மோ. ஜாஹுர் உசேன் | 25 |
| 25 | சே. முகம்மது நத்தர் | 26 |
| 26 | கு. சித்ரா | 27 |
| 27 | த. தமயந்தி | 28 |
| 28 | மு. ஜென்னத்பேகம் | 29 |
| 29 | க. சத்தியவாணி | 31 |
| 30 | கி. கவிதா | 32 |
| 31 | மு. பரணிகுமார் | 33 |
| 32 | ஆர்.ஏ.டி. அண்ணாதுரை | 34 |
| 33 | த. கமலநாதன் | 35 |
| 34 | ப.ஞானமணி | 36 |

## குழு உறுப்பினர்கள் விவரம்
## வரிவிதிப்பு மேல்முறையீட்டு குழு உறுப்பினர்கள், ஒப்பந்த குழு உறுப்பினர்கள் மற்றும் நியமனக்குழு உறுப்பினர்கள் விவரம்

| வ.எண் | உறுப்பினர் பெயர் | வார்டு எண் |
|---|---|---|
| 1 | எம். ஜீலைகள் பீவி | 14 |
| 2 | சு.சுரேஷ் | 16 |
| 3 | த. செல்வராணி | 19 |
| 4 | சே. முகம்மது நத்தர் | 26 |
| **ஒப்பந்த குழு உறுப்பினர்கள் விவரம்** | | |
| 1 | பா. திலகர் | 17 |
| **நியமனக்குழு உறுப்பினர்கள் விவரம்** | | |
| 1 | பா. கலா | 23 |

**இடவசதி**

நகராட்சி அலுவலகம் நகர அளவு எண்.4, பிளாக் எண்.30, சர்வே எண்.1267 இல் உள்ள இடத்தில் 1 ஏக்கர் 29377 சதுர அடி பரப்பளவு கொண்ட சொந்த கட்டிடத்தில் இயங்கி வருகிறது.

**ஆணையர்கள்**

| வ.எ | ஆணையரின் பெயர் திருவாளர்கள் | பதவி வகித்த காலம் |
|---|---|---|
| 1 | திருமதி. ந. ஸ்ரீதேவி ஆணையர் | 01.04.2023 ஆம் தேதி முதல் 25.04.2023 வரை |
| 2 | திரு. ந. பாஸ்கர் மேலாளர் ஆணையர் (பொ) | 26.04.2023 ஆம் தேதி முதல் 05.05.2023 ஆம் தேதி வரை |
| 3 | திரு. விஜய் கார்த்தி பொறியாளர் ஆணையர் (பொ) | 08.05.2023 ஆம் தேதி முதல் 30.06.2023ஆம் தேதி வரை |
| 4 | திரு. சங்கர் ஆணையர் மயிலாடுதுறை நகராட்சி ஆணையர் (பொ) | 01.07.2023ஆம் தேதி முதல் 23.08.2023ஆம் தேதிவரை |
| 5 | திரு. திருமால் செல்வம் ஆணையர் | 23.08.2023ஆம் தேதி முதல் 09.01.2024 ஆம் தேதி வ ரை |
| 6 | திரு. ந. பாஸ்கர் மேலாளர் ஆணையர் (பொ) | 10.01.2024 ஆம் தேதி முதல் 28.01.2024 ஆம் தேதி வரை |
| 7 | திரு. நா. சந்திரசேகரன் பொறியாளர், ஆணையர் (பொ) | 29.01.2024 ஆம் தேதி முதல் 23.02.2024ஆம் தேதி வரை |
| 8 | திரு. வ. நாராயணன் ஆணையர் | 24.02.2024 ஆம் தேதி முதல் 31.03.2024 ஆம் தேதி வரை |

**மேலாளர் பதவி வகித்தவர்கள்**

01.04.2023 ஆம் தேதி முதல் 31.03.2024 ஆம் தேதி வரை திரு. ந.பாஸ்கர் அவர்கள் மேலாளர் பணியாற்றியுள்ளார். திருமதி. க.சசிகலா உதவியாளர் 01.04.2023 ஆம் தேதி முதல் 12.10.2023, 13.10.2023 ஆம் தேதி முதல் 31.03.2024 ஆம் தேதி வரை கணக்கர் கூடுதல் பொறுப்பு வகித்துள்ளார்.

**பணியாளர்கள் (பொதுப்பிரிவு)**

அறிக்கையாண்டில் மேலாளர், மேற்பார்வையில் கீழ்கண்ட பணியாளர்கள் பணிபுரிந்து வந்தனர்.

1. மேலாளர் – 1
2. கணக்கர் – 1
3. உதவி வருவாய் அலுவலர் – 1 (காலியிடம்)
4. உதவியாளர் – 3
5. வருவாய் ஆய்வாளர் – 2
6. இளநிலை உதவியாளர் . 8 (1 காலியிடம்)
7. வருவாய் உதவியாளர் – 8
8. தட்டச்சர் –3 (3 காலியிடம்)
9. பதிவரை எழுத்தர் – 1
10. அலுவலக உதவியாளர்கள் –4 (1 காலியிடம்)
11. காவலர் – 3 (2 காலியிடம்)
12. உதவி திட்ட அமைப்பாளர் – 1

**நகரமைப்பு பிரிவு**

**நகரமைப்பு அலுவலர் 1 பணியிடம்**

01.04.2023 ஆம் தேதி முதல் 26.05.2023 ஆம் தேதி வரை திரு. ஆர். ரவிசந்திரன் அவர்கள் நகரமைப்பு அலுவலராக பணிபுரிந்தார். 27.05.2023 ஆம் தேதி முதல் 08.06.2023 ஆம் தேதி வரை மேற்படி பணியிடம் காலியாக இருந்நது. 09.06.2023 ஆம் தேதி முதல் 28.11,2023 ஆம் தேதி வரை திரு. ம. காஜாமுகைதீன் நகரமைப்பு அலுவலராக பணியாற்றினார். 29.11.2023 ஆம் தேதி முதல் 31.03.2024 ஆம் தேதி வரை பணியிடம் காலியாக உள்ளது.

**நகரமைப்பு ஆய்வாளர் – 2 பணியிடம்**

திரு. கு. முருகானந்தம் நகரமைப்பு ஆய்வாளர் 01.04.2023 ஆம் தேதி முதல் 26.04.2023 ஆம் தேதி வரை பணிபுரிந்தார். 27.04.2023 ஆம் தேதி முதல் 25.05.2023 ஆம் தேதி வரை காலியாக இருந்து வந்தது. 26.05.2023 ஆம் தேதி முதல் 20.03.2024 ஆம் தேதி வரை திரு. ஆர். எஸ். நாகராஜன் என்பவர் நகரமைப்பு ஆய்வாளராக பணிபுரிந்தார். 21.03.2024ஆம் தேதி முதல் 31.03.2024 ஆம் தேதி வரை பணியிடம் காலியாக உள்ளது.

**நகரமைப்பு ஆய்வாளர்–2**

திரு. ம. செல்வராஜ் நகரமைப்பு ஆய்வாளர் 01.04.2023 ஆம் தேதி முதல் 05.05.2023 ஆம் தேதி வரை பணிபுரிந்தார். மேலும் 06.05.2023 ஆம் தேதி முதல் 31.03.2024 காலியாக உள்ளது.

**பொதுசுகாதாரப்பிரிவு**

1. துப்புரவு அலுவலர் – 1
2. துப்புரவு ஆய்வாளர் – 2 ( 2 காலியிடம்)
3. துப்புரவு பணிமேற்பார்வையாளர் – 7
4. ஓட்டுநர் – 7
5. தூய்மைப்பணியாளர்கள் – 65 (134 காலியிடம்)

**பொறியியல் பிரிவு**

திரு.எம். ஜெயகிருஷ்ணன், நகராட்சி பொறியாளர் 01.01.2023 ஆம் தேதி முதல் 18.01.2023 ஆம் தேதி வரையிலும், திரு. பி.விஜய்கார்த்தி, நகராட்சி பொறியாளர் 23.01.2023 ஆம் தேதி முதல் 31.07.2023 ஆம் தேதி வரையில் பணிபுரிந்துள்ளனர். மேலும் அரசாணை 10இன்படி, தேர்வுநிலை நகராட்சியில் உதவி செயற்பொறியாளர் நிலை பணியிடம் பதவி உயர்வில் திரு. நா. சந்திரசேகரன், உதவிசெயற்பொறியாளராக 01.08.2023 ஆம் தேதி முதல் 31.03.2024 ஆம் தேதி வரை பணியாற்றியுள்ளார்கள்.

இந்நகராட்சி பொறியியல் பிரிவில் பொறியாளர் தலைமையின்கீழ் கீழ்க்கண்ட பணியாளர்கள் பணிபுரிந்து வருகிறார்கள்.

1. உதவி செயற்பொறியாளர் . 1
2. இளநிலை பொறியாளர் –
3. மின் பணியாளர் நிலை
4. பிட்டர் – 1 (காலியிடம்)
5. மின் கம்பியாளர் – 1 (1 காலியிடம்)
6. ஓட்டுநர்கள் – 3
7. துலக்குநர்கள் – 17 (17 காலியிடம்)

அரசாணை 10 இன்படி தேர்வு நிலை நகராட்சி பதவிகளின் விவரங்கள்

| வ.எண் | பணியிடங்கள் விவரம் | அரசாணை 10 இன் படி ஒதுக்கீடு செய்யப்பட்ட பணியிடங்கள் | அரசாணை 10இன் படி நிரப்பப்பட்ட பணியிடங்கள் |
|---|---|---|---|
| 1 | மேலாளர் வகுப்பு – 1A | 1 | 1 |
| 2 | கணக்கர் வகுப்பு – II | 1 | 1 |
| 3 | உதவி வருவாய் அலுவலர் | 1 | 0 |
| 4 | வருவாய் ஆய்வாளர் | 2 | 2 |
| 5 | உதவியாளர் | 3 | 3 |
| 6 | இளநிலை உதவியாளர் | 8 | 7 |
| 7 | தட்டச்சர் | 3 | 0 |
| 8 | வருவாய் உதவியாளர் | 8 | 8 |
| 9 | பதிவறை எழுத்தர் | 1 | 1 |
| 10 | அலுவலக உதவியாளர் | 4 | 3 |
| **பொறியியல் பிரிவு** | | | |
| 1 | உதவி செயற்பொறியாளர் | 1 | 1 |
| 2 | உதவி பொறியாளர் | 2 | 1 |
| 3 | பொதுப்பணி மேற்பார்வையாளர் | 2 | 2 |
| 4 | படவரைவாளர் நிலை – III | 1 | 1 |
| 5 | பணி ஆய்வாளர் | 4 | 4 |
| 6 | மின் கண்காணிப்பாளர் – II | 1 | 1 |
| 7 | குழாய் பொருத்துநர் நிலை – I | 1 | 1 |
| **நகரமைப்பு பிரிவு** | | | |
| 1 | நகரமைப்பு அலுவலர் நிலை – I | 1 | |
| 2 | நகரமைப்பு ஆய்வாளர் | 2 | |
| **பொதுசுகாதாரப்பிரிவு** | | | |
| 1 | துப்புரவு அலுவலர் | 1 | 0 |
| 2 | துப்புரவு ஆய்வாளர் | 4 | 2 |
| 3 | துப்புரவு பணிமேற்பார்வையாளர் | 7 | 7 |
| 4 | களப்பணி உதவியாளர் | 1 | 1 |
| **கணினி பிரிவு** | | | |
| 1 | கணினி உதவி திட்ட அமைப்பாளர் | 1 | 1 |

## பொறியியல் பிரிவு

### சாலைகள்

இந்நகராட்சி எல்லைக்குள் 148.594 கி.மீட்டர்கள் சாலைகள் உள்ளன. அவற்றில் 25.32 கி.மீட்டர் நீளமுள்ள நெடுஞ்சாலைத்துறையினராலும் 123.274 கி.மீட்டர்கள் நீளமுள்ள சாலைகள் நகராட்சியிலும் பராமரிக்கப்பட்டு வருகிறது. அவற்றின் விபரங்கள் பின்வருமாறு.

1. தார் சாலைகள் : 76.372 கி.மீ
2. கான்கீரிட் சாலைகள் : 44.875 கி.மீ
3. கருங்கல் ஜல்லி சாலைகள்
4. (பேவர்பிளாக் சாலைகள்) : 2.027 கி.மீ
5. கிராவல் சாலைகள் :

மொத்தம் : 123.274 கி.மீ

### பூங்காக்கள்

அறிக்கையாண்டில் கீழ்கண்டுள்ள விவரப்படி பூங்காக்கள் நகராட்சியால் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்படுகிறது

| | |
|---|---|
| 1 | இ.ஜி.எஸ். பிள்ளை பூங்கா |
| 2 | ஆண்டோ சிட்டி பூங்கா |
| 3 | நெய்தல் நகர் பூங்கா |
| 4 | நெய்தல் நகர் பூங்கா |
| 5 | ஆர்.வி.ஜி நகர் பூங்கா |
| 6 | எம்.ஆர்.பி.நகர் பூங்கா |
| 7 | நெய்தல் நகர் பூங்கா – 1 |
| 8 | நெய்தல் நகர் பூங்கா – 2 |
| 9 | எஸ்.எஸ்.எம். நகர் பூங்கா |
| 10 | ஏ.டி.ஜெ. அவென்யூ பூங்கா |
| 11 | மறைமலை நகர் |
| 12 | சிவசக்தி நகர் பூங்கா |
| 13 | நெய்தல் நகர் பூங்கா |
| 14 | தம்பிதுரை பூங்கா |
| 15 | கோட்டை வாசல் பூங்கா |
| 16 | கிரசன்ட் பூங்கா |
| 17 | VIP நகர் பூங்கா |
| 18 | மகாலெட்சுமி நகர் பூங்கா |
| 19 | மாடர்ன நகர் பூங்கா |
| 20 | KCP நகர் பூங்கா |
| 21 | கொடி மர பூங்கா |
| 22 | இளஞ்சேரன் நகர் பூங்கா |
| 23 | மறைமலை நகர் பூங்கா |
| 24 | தம்பிதுரை பூங்கா |

## பொது நூலகங்கள்

தமிழ்நாடு அரசு நூலகத்துறையினரால் நாகப்பட்டினம் மற்றும் நாகூர் நகர பகுதியில் தலா ஒரு பொதுநூலகம் இயங்கி வருகிறது.

## தெருவிளக்குகள்

அறிக்கையாண்டில் நகராட்சி பராமரிப்பில் உள்ள விளக்குகள் விவரம்

| | | |
|---|---|---|
| 1 | எல்.இ.டி விளக்குகள் | 3,828 |
| 2 | சோடியம் ஆவி விளக்குகள் | 2,67 |
| 3 | மெடல் ஹாலிட் விளக்குகள் | 97 |
| 4 | சிறிய மற்றும் உயர் கோபுரவிளக்குகள் | 20 |
| 5 | இதர விளக்குகள் | 44 |
| | **மொத்தம்** | **4,256** |

01.01.2018 முதல் 36 வார்டுகளில் உள்ள தெருவிளக்குகள் பராமரிக்கும் பணிகள் மற்றும் அனைத்து தெருவிளக்குகளை எல்.இ.டி ஆக மாற்றம் செய்திடும் பணிகள் தனியார் வசம் ஒப்படைக்கப்பட்டு தனியார் மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது. சபரி எலக்ட்ரிக்கல் சென்னை நிறுவனம் மூலம் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**அறிக்கையாண்டில் மேற்கண்டுள்ள பிரிவுகளின் நிர்வாக செலவினம் வருமாறு (2023–2024)**

| | | |
|---|---|---|
| 1 | பொதுப்பிரிவு (கணினிப்பிரிவு உட்பட) | 1,06,46,206 |
| 2 | வருவாய் பிரிவு | 49,97,627 |
| 3 | சுகாதாரப்பிரிவு | 5,02,98,006 |
| 4 | நகரமைப்பு பிரிவு | 14,45,977 |
| 5 | பொறியியல் பிரிவு | 54,87,950 |
| 6 | மருத்துவப்பிரிவு | 38,87,828 |
| | **மொத்தம் ரூ.** | **7,67,63,594** |

## பொறிகளும்–கருவிகளும்

கணினி பிரிவிற்கு கீழ்கண்ட உபகரணங்கள் பயன்படுத்தப்பட்டு வருகிறது

1. கணினிகள் – 16
2. லேப்டாப் – 2
3. டாட் மேட்ரிக்ஸ் – 3
4. லேன் போர்ட் சுவிட்சஸ் – 3
5. யு.பி.எஸ் – 3

**கல்லூரிகள்**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அ.து.ம ஜெயவீரப்பாண்டிய நாடார் மகளிர் கல்லூரி, இ.ஜி.ஸ். பிள்ளை பொறியியல் மற்றும் கலைக்கல்லூரி தலா ஒன்று இயங்கி வருகின்றன. மேலும் வலிவலம் தேசிகர் தொழில்நுட்ப கல்லூரி (ஆண்கள்), அ.து.ஜெ. மகளிர் தொழில்நுட்ப கல்லூரி (பெண்கள்), அரசு அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் (ஆண்கள்) தலா ஒன்று இயங்கி வருகிறது.

**கல்வி, பொழுதுபோக்கு மற்றும் கலாச்சார வசதி**

| வ.எ | விபரம் | நகராட்சி | அரசு மற்றும் அரசு உதவிபெறும் மற்றும் தனியார் பள்ளிகள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1 | தொடக்கப்பள்ளி | 11 | 11 | 22 |
| 2 | நடுநிலைப்பள்ளி | 8 | 1 | 9 |
| 3 | மேல்நிலைப்பள்ளி | 1 | 7 | 8 |
| 4 | கலை அறிவியல் கல்லூரி | – | 2 | 2 |
| 5 | பொறியியல் கல்லூரி | – | 1 | 1 |
| 6 | பாலிடெக்னிக் | – | 3 | 3 |
| 7 | ஐ.டீ.ஐ | – | 1 | 1 |
| 8 | முறைசாராகல்வி நிறுவனம் | – | 1 | 1 |
| 9 | ஆதரவற்றோர் இல்லம் | 2 | 2 | 4 |
| 10 | மகளிர் விடுதி | – | 3 | 3 |
| 11 | முதியோர் இல்லங்கள் | – | 1 | 1 |
| 12 | விளையாட்டு மைதானம் | 1 | 4 | 5 |
| 13 | திரையரங்கம் | – | 2 | 2 |
| 14 | சமுதாய கூடம் | – | 1 | 1 |
| 15 | பொது நூலகம் | – | 2 | 2 |

**புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத்திட்டம்**

11 நகராட்சி தொடக்கப்பள்ளிகளிலும் 7 நடுநிலைப்பள்ளியிலும் 2 மேல்நிலைப்பள்ளியிலும் சத்துணவு மையங்கள் பராமரிக்கப்பட்டு 5 வயது முதல் 9 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு சத்துணவு அளிக்கப்பட்டு வருகிறது. மேல்நிலைப்பள்ளிகளில் 10 முதல் 14 வயது வரையுள்ள மாணவர்களுக்கு சத்துணவு அளிக்கப்பட்டு வருகிறது.

2023–2024 ஆம் ஆண்டில் நாள் ஒன்றுக்கு 1339 மாணவ / மாணவிகள் (ஆண் – 711, பெண் – 628) இத்திட்டத்தின் மூலம் பயன்பெற்று வருகிறார்கள்.

ஒவ்வொரு பள்ளி மையத்திற்கும் தன்னார்வர்கள் மூலம் 19 சத்துணவு மையங்களுக்கு மாணவர்களுக்கு உணவு வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கென ஒரு உதவியாளர் மற்றும் கணக்கர் நகராட்சியில் பணிபுரிந்து வருகிறார்.

**பணியாளர்கள் அனுமதிக்கப்பட்ட விபரம்**

வயது 5 முதல் 9 வயது வரை (10 வயது முதல் 14 வயது முடிய)

| வ.எ | அனுமதிக்கப்பட்ட பணியாளர்கள் | மொத்த பணியிடம் | பணியில் உள்ளோர் | காலிப்பணியிடம் |
|---|---|---|---|---|
| 1 | அமைப்பாளர் | 20 | 7 | 13 |
| 2 | சமையலர் | 20 | 17 | 3 |
| 3 | உதவியாளர் | 20 | 8 | 12 |

இத்திட்டத்தின் கீழ் மாணவர் ஒருவருக்கு கீழ்கண்ட விகிதப்படி சத்துணவு பொருட்கள் அளிக்கப்பட்டு வந்தது.

1. அரிசி – 150 கிராம்
2. பருப்பு – 15 கிராம்
3. எண்ணெய் – 3 கிராம்
4. பாசிபயிறு – 20 கிராம்
5. கொ. கடலை – 20 கிராம்
6. உருளை கிழங்கு – 40 கிராம்
7. முட்டை – 1 (வாரத்திற்கு 5 நாட்கள்)

அரசாணை (நிலை) எண்.79 சமூக நலம் மற்றும் மகளிர் உரிமை (ச.ந.4–1) துறை நாள்: 21.10.2024 இன்படி புரட்சி தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவு திட்டத்தின் கீழ் வழங்கப்படும் மதிய உணவு கீழ்கண்ட விவரப்படி மாணவ மாணவிகளுக்கு வழங்கப்படுகிறது.

**கலவை உணவு விபரம்**

| கிழமை | முதல் மற்றும் மூன்றாவது வாரம் | இரண்டாவது மற்றும் நான்காவது வாரம் |
|---|---|---|
| திங்கள் கிழமை | வெஜிடேபிள் பிரியாணி (ம) மிளகு முட்டை | பிசிபேளாபாத் (ம) வெங்காயம் தக்காளி முட்டை மசாலா |
| செவ்வாய் கிழமை | கொண்டைக்கடலை, புலாவு, (ம) தக்காளி மசாலா முட்டை | சாதம், காய்கறி சாம்பார் (ம) மிளகு முட்டை |
| புதன் கிழமை | தக்காளி சாதம் (ம) முட்டை மிளகு முட்டை | புளிசாதம் தக்காளி, சுண்டல் (ம) மசாலா முட்டை |
| வியாழன் கிழமை | சாம்பார் சாதம் (ம) முட்டை | எலுமிச்சைப்பழம் சாதம் (ம) மசாலா முட்டை |
| வெள்ளி கிழமை | கறிவேப்பிலை சாதம் கீரை சாம்பார்சாதம், உருளைகிழங்கு வறுத்த (ம) மசாலா முட்டை | சாம்பார் சாதம் வேகவைத்த முட்டை (ம) வறுத்த உருளைகிழங்கு |

மேற்கண்டவாறு கலவை உணவு வழங்கப்படுவதற்கு அரசு ஆணை (நிலை) எண்.49, சமூக நலம் (ம) சத்துணவு திட்டத்துறை (ச.ந.4–1) நாள்:04.11.2019 இன் படி உணவூட்டுச் செலவினங்கள் கீழ்கண்டவாறு உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

| வயது | பருப்பு பயன்படுத்தும் நாட்களுக்குரிய செலவினம் | பருப்பு பயன்படுத்தாத நாட்களுக்குரிய செலவினம் |
|---|---|---|
| (5+9 வரை) 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை | 1.41 காசுகள் | 1.41 |
| 6 முதல் 10 வகுப்பு (10+14 வரை) | 1.73 காசுகள் | 1.73 |

நாகப்பட்டினம் கூடுதல் உதவி தொடக்கக்கல்வி அலுவரின் கடிதம் எண்.1255/10/அ1, நாள்: 29/7/2010இன் படி நாகப்பட்டினம் டாடா நகர் சுனாமி குடியிருப்பு பகுதியில் புதியதாக கட்டப்பட்ட துவக்கப்பள்ளி வார்டு 35 இல் அமைந்துள்ளதால் நகராட்சி தொடக்கப்பள்ளி, டாடா சுனாமி குடியிருப்பு, நாகப்பட்டினம் என்ற பெயரில் இயங்கி வருகிறது என்றும், அப்பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கு சத்துணவு வழங்கிடவும் தெரிவிக்கப்பட்டது. அதன்படி அப்பள்ளி நகர்மன்ற தீர்மான எண்.302. நாள்: 15.11.2010இன்படி நகராட்சி பள்ளியாக ஏற்கப்பட்டு 01.08.2011 ஆம் தேதி முதல் நகராட்சியின் மூலம் சத்துணவு வழங்கப்படுகிறது.

மேற்கண்ட சத்துணவு பணியாளர்களுக்கு அரசாணை எண்.234 நிதி (ஊதியப்பிரிவு) துறை நாள்:01.06.2009 இன்படி 6–வது ஊதியக்குழு நிர்ணயத்தின்படி ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டு அரசாணை(டி) எண்.3 சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத்துறை (என்எம்பி2) நாள்: 23.04.2012 இன் படி நாகப்பட்டினம் மாவட்ட கருவூலத்தின் மூலம் ஜூலை 2012 முதல் ஊதியம் மற்றும் ஒய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது. உணவூட்டு செலவினங்கள் மாவட்ட ஆட்சியரின் செயல்முறை ஆணையின்படி காலாண்டுக்கு ஒரு முறை சத்துணவு மான்யம் பெறப்பட்டு உணவூட்டு செலவினங்கள் வழங்கப்படுகிறது. இம்மான்யம் நாகப்பட்டினம் மாவட்ட கருவூலகத்தின் மூலம் பொது நிதிக்கு வரவு வைக்கப்பட்டு, அதன் பின் மான்யத்தொகை சத்துணவு கணக்கிற்கு மாற்றம் செய்யப்படுகிறது.

| வ.எண் | பணியிடங்கள் விவரம் | ஊதிய விகிதம் |
|---|---|---|
| 1 | அமைப்பாளர் | 7700–24200 |
| 2 | சமையலர் | 4100–12500 |
| 3 | சமையலரின் உதவியாளர் | 3000–9000 |

நாகப்பட்டினம் நகராட்சி பகுதியில் 16.09.2022 ஆம் தேதி முதல் துவங்கப்பட்ட 20 நகராட்சி பள்ளிகளில் முதற்கட்டமாக (Phase – I) 11 தொடக்கப்பள்ளிகளில் கல்வி பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு காலை சிற்றுண்டி சிறப்பான முறையில் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் நாகப்பட்டினம் நகராட்சி வார்டு 23 கூக்ஸ் ரோட்டில் புதியதாக கட்டப்பட்ட ஒருங்கிணைந்த சமையற்கூடம் (Common Kitchen) ஒன்று புதியதாக கட்டப்பட்டு அதன் மூலம் உணவு சமைத்து வழங்குவதற்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திரு. கே. முத்துகுமார், ஸ்ரீ அம்மன் ஏஜென்சீஸ், நாகப்பட்டினம் என்பவருக்கு உத்தரவு வபழங்கப்பட்டு தினசரி காலை 569 சத்துணவு உண்ணும் மாணவ/மாணவியருக்கு சிறந்த முறையில் காலை சிற்றுண்டி வழங்கப்பட்டு வருகிறது.

அதன் பின்பு இத்திட்டம் விரிவுப்படுத்தப்பட்டு (Phase–II) 8 நகராட்சி நடுநிலைப்பள்ளிகளில் 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை கல்வி பயிலும் 770 மாணவ மாணவியர்களுக்கு மார்ச் 1 ஆம் தேதி முதல் காலை சிற்றுண்டி வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் கீழ்கண்ட நகராட்சி பள்ளிகளின் மூலம் 1339 மாணவ / மாணவியர்கள் பயனடைந்து வருகிறார்கள். நகராட்சி ஆரம்பப்பள்ளி, நடுநிலைப்பள்ளி மற்றும் மகளிர் மேல்நிலைப்பள்ளிகளில் 23 தூய்மைப்பணியாளர்கள் முழுவதும் ஒப்பந்த அடிப்படையில் பணிப்புரிந்து வருகிறார்கள்.

| வ.எ | பள்ளியின் பெயர் | மாணவ, மாணவியரின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | நகராட்சி இஸ்லாம் துவக்கப்பள்ளி, நாகூர் | 14 |
| 2 | நகராட்சி பெருமாள் கீழ வீதி துவக்கப்பள்ளி, நாகூர் | 80 |
| 3 | நகராட்சி பால்பண்ணைச்சேரி துவக்கப்பள்ளி, நாகூர் | 130 |
| 4 | நகராட்சி சர் அகமது தெரு துவக்கப்பள்ளி நாகப்பட்டினம் | 10 |
| 5 | நகராட்சி வேதநாயகம்செட்டித் தெரு துவக்கப்பள்ளி, நாகப்பட்டினம் | 17 |
| 6 | நகராட்சி புதுத்தெரு துவக்கப்பள்ளி, நாகப்பட்டினம் | 68 |
| 7 | நகராட்சி காளியம்மன் சன்னதி துவக்கப்பள்ளி, நாகப்பட்டினம் | 58 |
| 8 | நகராட்சி மேலக்கோட்டை வாசல் துவக்கப்பள்ளி, நாகப்பட்டினம் | 30 |
| 9 | நகராட்சி கீரைக்கொல்லைத் தெரு துவக்கப்பள்ளி, நாகப்பட்டினம் | 30 |
| 10 | நகராட்சி கோட்டை மேட்டுத்தெரு துவக்கப்பள்ளி, நாகப்பட்டினம் | 40 |
| 11 | நகராட்சி டாடா நகர் (சுனாமி குடியிருப்பு) துவக்கப்பள்ளி, நாகப்பட்டினம் | 92 |
| 12 | நகராட்சி மாணிக்கம் செட்டியார் நடுநிலைபள்ளி, நாகூர் | 130 |
| 13 | நகராட்சி இஸ்லாம் நடுநிலைப்பள்ளி மியாத்தெரு, நாகூர் | 70 |
| 14 | நகராட்சி நடுநிலைப்பள்ளி, காடம்பாடி, நாகப்பட்டினம் | 200 |
| 15 | நகராட்சி நெல்லுக்கடைத்தெரு, நடுநிலைப்பள்ளி, வெளிப்பாளையம் நாகப்பட்டினம் | 125 |
| 16 | நகராட்சி கல்லுக்காரத்தெரு நடுநிலைப்பள்ளி, நாகப்பட்டினம் | 54 |
| 17 | நகராட்சி பட்டினச்சேரி நடுநிலைப்பள்ளி சம்பாத்தோட்டம் | 68 |
| 18 | நகராட்சி சாமந்தான் பேட்டை நடுநிலைப்பள்ளி, நாகூர் | 85 |
| 19 | நகராட்சி நம்பியார் நகர் நடுநிலைப்பள்ளி நாகப்பட்டினம் | 38 |
| | **கூடுதல்** | **1,339** |

மேற்கண்ட காலை சிற்றுண்டி ஒப்பந்தப்புள்ளி விலையில் ஒரு பயனாளிக்கு ரூ.12.65/- வீதம் செலவிடப்படுகிறது. இதற்கென அரசிடமிருந்து நிதி பெறப்பட்டு நகராட்சி நிர்வாக இயக்குநரகத்திலிருந்து காலண்டிற்கொரு முறை தொகை புதிய வங்கி கணக்கில் வரவு வரப்பெற்று செலவினங்கள் மேற்கொள்ளப்படுகிறது. ஒப்பந்தக்காரருக்கு ஜுலை 23 ஆம் தேதி மாதம் முடிய தொகை வழங்கப்பட்டுள்ளது.

மேலும் காலை சிற்றுண்டி தயார் செய்வது பள்ளிகளுக்கு அனுப்புவதை வருவாய் ஆய்வர் மூலம் காலை 4.30 மணிக்கு சமையல் பணி துவங்குவது முதல் பள்ளிகளுக்கு உணவு உரிய வாகனம் மூலம் அனுப்பப்படுகிறது வரை CMBFS Mobile App இல் உடனுக்குடன் பதிவேற்றம் செய்யப்பட்டு, பள்ளிகளில் பள்ளி சத்துணவு மைய அமைப்பாளர்கள் மற்றும் பள்ளியில் பணியாற்றும் இல்லம் தேடி கல்வி தன்னார்வலர்கள் ஆகியோர்களால் உணவு பெறப்படுவது, குழந்தைகளுக்கு உணவு பரிமாறுவது மற்றும் உணவு வழங்கல் முடிவுற்றது என CMBFS Mobile App இல் பதிவேற்றம் செய்து பணியாற்றி வருகிறார்கள். இப்பணிக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித எண்.17404/2022/எம்1, நாள்: 01.11.2022 இன்படி மதிப்பூதியமாக ஒரு பள்ளிக்கு ரூ.1500/– வீதம் பணியாற்றும் பணியாளர்களுக்கு அவரவர் வங்கி கணக்குகளில் வழங்கப்பட்டு வருகிறது. இத்தொகையினை மாதம் மாதம் நகராட்சி கல்வி நிதியிலிருந்து செலவிடப்படுகிறது. பணியாளர்களுக்கு மார்ச் 24 மாதம் முடிய வழங்கப்பட்டுள்ளது.

**பொதுநலம் மருத்துவ வசதி**

நகராட்சி எல்லைக்குள் நகராட்சி புதிய பேருந்து நிலையம் எதிரில் நாகப்பட்டினம் மாவட்ட அரசினர் தலைமை மருத்துவமனை உள்ளது. இது நகரின் நடுவில் அமைந்துள்ளது. அறிக்கையாண்டில் பொது மக்களின் மருத்துவத் தேவைக்காக கீழ்காணும் மருத்துவமனைகள் பயன்படுத்தப்பட்டு வந்தன.

1. அரசினர் தலைமை மருத்துவமனை, நாகப்பட்டினம்
2. அரசினர் மருத்துவமனை, நாகூர்.
3. மாநில தொழிலாளர்கள் காப்பீட்டு மருத்துவமனை, நாகப்பட்டினம்
4. காசநோய் மருத்துவமனை நாகப்பட்டினம்.

இவை தவிர தனியார்களால் மருத்துவமனைகள் நடத்தப்பட்டு வந்தன. அறிக்கையாண்டில் மருத்துவமனை எதற்கும் மன்றத்தின் நிதியிலிருந்து நன்கொடை வழங்கப்படவில்லை.

**பொதுசுகாதாரம்**

நகராட்சி பொதுசுகாதாரத்தினை பேணிக்காத்திட ஒரு துப்புரவு அலுவலர், இரண்டு துப்புரவு ஆய்வாளர்கள் பதினாங்கு துப்புரவுப்பணி மேற்பார்வையாளர்கள் அறுபத்து ஐந்து நிரந்தர தூய்மைப் பணியாளர்கள் மற்றும் ஏழு ஓட்டுநர்கள் அறிக்கையாண்டில் பணியாற்றியுள்ளனர்.

12 பொதுக்கழிப்பிடங்கள் உபயோகத்தில் இருந்து வந்தது. துப்புரவுப் பணிகள் மேற்கொள்ள நகரம் நான்கு பிரிவுகளாக பிரிக்கப்பட்டு பொதுசுகாதாரப் பணிகள் சிறப்புடன் செயல்படுத்தப்பட்டன.

பிறப்பு மற்றும் இறப்பு சான்றுகள் உடனுக்குடன் வழங்கப்பட்டு வருகிறது.

அறிக்கையாண்டில் கீழ்கண்டுள்ள வாகனங்கள் தூய்மைப் பணிக்காக பயன்பாட்டில் இருந்தது.

| | | | |
|---|---|---|---|
| **1.** | கழிவு நீர் அகற்றும் லாரி | – | 1 |
| **2.** | டிப்பர் லாரி | – | 3 |
| **3.** | ஜெட்ராடிங் வாகனம் | – | 1 |
| **4.** | காம்பெக்டர் | – | 2 |
| **5.** | டாடா ஏசி | – | 10 |
| **6.** | நாய் பிடிக்கும் வாகனம் | – | 1 |
| | **மொத்தம்** | – | **18** |

**உரக்கிடங்கு**

நாகப்பட்டினம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் மேலக்கோட்டை வாசல், அரசு மருத்துவமனை பின்புறம் மற்றும், நாகூர் வெட்டாறு அருகில் 1 ஏக்கர் நில பரப்பளவில் தலா ஒரு உரக்கிடங்கு இயங்கி வருகிறது இதில் நாகப்பட்டினம் அரசு தலைமை மருத்துவமனை பின்புறம் (கூக்ஸ் ரோடு) 1.5 ஏக்கர் நிலப்பரப்பளவில் நுண்ணுயிர் உரக்கிடங்கு (Micro Compost Center) ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. ஆக மொத்த மூன்று உரக்கிடங்குகள் அறிக்கையாண்டில் பயன்பாட்டில் இருக்கிறது.

**ஆரம்ப நிலை சேகரிப்பு**

நாகப்பட்டினம் நகராட்சி திடக்கழிவு மேலாண்மை உபவிதி 2016 இன்படி, பொதுசுகாதார பணிகள் மற்றும் திடக்கழிவு மேலாண்மை பணிகள் 100 சதவீதம் செம்மையாக செயல்படுத்திட போதுமான தூய்மைப்பணியாளர்கள் இல்லாத நிலையில் நகராட்சி நிர்வாக இயக்குநரின் செயல்முறை கடிதம் ந.க.எண்:25865/பி3/13, நாள்:20.07.2013 இன்படி நகராட்சி ஒப்பந்த விதிமுறைகளை பின்பற்றி இந்நகரமன்ற தீர்மான எண்:101 நாளில் அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து M/s. Saram Soild Waste Management என்ற தனியார் நிறுவனத்தினரால் முழுவதும் ஒப்பந்த அடிப்படையில் தூய்மைப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**கலவை உரம் தயாரிப்பு**

நாகப்பட்டினம் நகராட்சியில் 2023-2024 ஆம் நிதியாண்டில் M/s.Saram Soild Waste Management என்ற தனியார் நிறுவனத்தின் மூலம் முழுவதும் ஒப்பந்த அடிப்படையில் தூய்மை பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன்படி 36 வார்டுகளில் 25,412 குடியிருப்பு பகுதிகள் அடங்கிய 631 தெருகளில் சேகரமாகும் கழிவுகளை 3 உரக்கிடங்கிற்கு கொண்டு செல்லப்பட்டு மக்கும் குப்பை மற்றும் மக்கா குப்பை தரம் பிரித்து மக்கும் குப்பைகளை கலவை உரம் தயாரிக்கப்படுகிறது. மக்கா நெகிழி கழிவுகளை மறுசுழற்சி செய்வதற்கு அரியலூர் சிமெண்ட் ஆலைக்கு அவ்வப்போது அனுப்பப்படுகிறது.

**உணவு கலப்பட தடுப்புச்சட்டம்**

அறிக்கையாண்டில் அச்ச அருவருக்கத் தக்க தொழில் இனங்களுக்கும் வியாபாரிகளுக்கும் நிபந்தனைகளுக்குட்பட்டு உரிமையாணைகள் வழங்கப்பட்டுள்ளது.

**சீருடைகள் இயங்கும் திட்டம்**

2023-2024 ஆம் அறிக்கையாண்டில் நகராட்சியில் பணிபுரியும் 68 நிரந்தர தூய்மைப்பணியாளர்கள் 7 தூப்புரவு பணி மேற்பார்வையாளர்கள் பொதுப்பிரிவில் பணிபுரியும் 4 அலுவலக உதவியாளர்கள் ஆகியோர்களுக்கு சீருடைகள் வழங்கப்பட்டுள்ளது.

**நகர் நல வாழ்வு நிலையங்களின் செயல்பாடுகள்**

இந்நகராட்சியில் மருந்து கொத்தளம் ரோடு நகர் நல வாழ்வு மையம் மற்றும் நாகூர் தர்கா குளம் வடக்கரையில் தலா 1 நகர் நல வாழ்வு நிலையம் செயல்பட்டு வருகிறது. மேற்கண்ட நகர் நல வாழ்வு மையங்களில் மகப்பேறு மருத்துவமனை எதுவும் பராமரிக்கப்படவில்லை.

**பணியாளர்களின் விவரம்**

1. மருத்துவ அலுவலர்கள் – 2 (பெண்) (2 பணியிடம் காலியாக உள்ளது)
2. பகுதி சுகாதார செவிலியர்கள்– 2 (பெண்) (2 பணியிடம் காலியாக உள்ளது)
3. நகர சுகாதார செவிலியர்கள் – 11 (பெண்) (9 பணியிடம் காலியாக உள்ளது)
4. அலுவலக உதவியாளர்கள் – 2 (பெண்) (2 பணியிடம் காலியாக உள்ளது)

மேற்கண்டுள்ள 2 நகர சுகாதார செவிலியர்களுக்கு அறிக்கையாண்டில் சீருடைகள் வழங்கப்பட்டுள்ளது.

**மான்யம்**

அரசாணை எண்.136 குடிநீர் (வழங்கல்) துறை நாள்: 31.03.2001 இன்படி 2:1 என்ற விகிதத்தில் நகராட்சி பொதுநிதியிலிருந்து பணியாளர்களுக்கு ஊதியம் மற்றும் இதர செலவினங்கள் மேற்கொள்ளப்படுகிறது. 2:3 அரசு மானியத்திலும் சம்பளம் மற்றும் இதர செலவினங்கள் மேற்கொள்ளப்படுகிறது.

**செயல்பாடுகள்**

இந்நகராட்சியில் நகர்ப்புரங்களில் உள்ள குடிசைவாழ் பகுதியில் வாழும் மக்களுக்கு சேவை செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் ஏற்படுத்தப்பட்டு அங்குள்ள கர்ப்பிணி தாய்மார்கள் மற்றும் 0+5 வயதுள்ள குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து முதலாக ஐந்து வகை தடுப்பு மருந்துகள் உரிய நேரத்தில் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் குடும்ப நல மருத்துவ முகாம் போலியோ சொட்டு மருத்து முகாம் மற்றும் யாணைக்கால் நோய் தடுப்பு மாத்திரைகள் ஆண்டு தோறும் மேற்படி பணியாளர்களால் இந்நகராட்சி மூலம் பொது மக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. தகுதி வாய்ந்த தம்பதிகளுக்கு குடும்ப நல அறுவை சிகிச்சை செய்ய ஊக்குவிது தற்காலிக மற்றும் நிரந்தர முறையை பின்பற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. கொள்ளை நோய் பரவும் சமயத்தில் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது.

மேலும் நாகூர் ஆண்டவர் கந்தூரி திருவிழா காலங்களில் வரும் யாத்ரிகளுக்கு மருத்துவ முகாம் அமைக்கப்பட்டு சிறப்பு மருத்துவப்பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், தொற்று நோய்கள் வராமல் இருப்பதற்கு நோய் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு உதவித்திட்டத்தின் கீழ் 1134 கர்ப்பிணி தாய்மார்களுக்கு மகப்பேறு உதவித்தொகை ரூ.2500000/– லட்சம் மட்டும் வழங்கப்பட்டுள்ளது.

இரண்டு நகர் நல மையங்களிலும் தொற்றா நோய் திட்டம் (NCD SCHEME) மூலம் 2264 பயனாளிகளுக்கு சர்க்கரை நோய் மற்றும் இரத்த அழுத்தம் தொடர்பான நோய்களுக்கு 2 செவிலியர்கள் மூலம் நகரப்பகுதி மக்களுக்கு சிகிச்சை அளித்து வரப்படுகிறது. தற்காலிக மற்றும் நிரந்தரமாக குடும்ப நல அறுவை சிகிச்சை மூலம் பயனடைந்தவர்கள் விவரம்

| வ.எ | நிரந்தம் | | தற்காலிகம் | |
|---|---|---|---|---|
| 1 | PS | 211 | IUD | 300 |
| 2 | | | ORS | 301 |
| 3 | | | CENTCHROMAN TABLETS | 433 |
| 4 | | | INI ANTARADOS | 26 |
| 5 | | | CC | 1,,224 |

**பிறப்பும், மகப்பேறு வசதிகளும்**

அறிக்கையாண்டில் பதிவான பிறப்புகள் 1,565 மற்றும் இறப்புகள் 505 ஆகும். அறிக்கையாண்டில் 1 பெண் மருத்துவ அலுவலரும் 2 நகர சுகாதார செவிலியர்களும் பணிபுரிந்து வந்தனர். (மற்ற பணியிடங்கள் காலியாக உள்ளது)

**தடுப்பூசி போடப்பட்ட விபரங்கள்**

| வ.எ | விபரம் | இலக்கு | சாதனை | சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | BCn | 998 | 998 | 100% |
| 2 | I | 998 | 978 | 97% |
| 3 | II | 998 | 978 | 97% |
| 4 | III | 998 | 995 | 99% |
| 5 | MR | 998 | 998 | 100% |
| 6 | Iy2 Boost | 998 | 968 | 96% |
| 7 | IPR I | 998 | 978 | 97% |
| 8 | IPR II | 998 | 995 | 99% |
| 9 | IPR III | 998 | 998 | 100% |
| 10 | RVVI | 998 | 978 | 97% |
| 11 | RVV II | 998 | 978 | 97% |
| 12 | RVV III | 998 | 995 | 99% |
| 13 | PLV I | 998 | 978 | 97% |
| 14 | PLV II | 998 | 995 | 99% |
| 15 | PLV III | 998 | 998 | 100% |
| 16 | 5 YEAR DPT | 928 | 928 | 100% |
| 17 | 10 YEAR TD | 1601 | 1601 | 100% |
| 18 | 16 YEAR TD | 2156 | 2156 | 100% |
| 19 | OPV | 998 | 998 | 100% |
| 20 | சத்து மாத்திரை (5– 9 வயது) | 3997 | 3997 | 100% |
| 21 | சத்து மாத்திரை (10–19 வயது) | 11548 | 11548 | 100% |
| 22 | வைட்டமின் மாத்திரை | 6072 | 6072 | 100% |
| 23 | வைட்டமின் SYRUP | 4883 | 4883 | 100% |
| 24 | புதுயுகம் நாப்கின் | 12807 | 12807 | 100% |

**இறப்பும் தொற்று நோய்களும்**

அறிக்கையாண்டில் காலரா நோய் போன்ற தொற்று நோய்களுக்கு யாரும் மரணம் அடையவில்லை. தொற்று நோய் பரவாமல் தடுக்க எல்லா சுகாதார ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டன.

அறிக்கையாண்டில் நகராட்சி பகுதிகளில் டெங்கு காய்ச்சல் நோய் கண்டறியப்பட்டு அதனை போர்கால அடிப்படையில் பணிகள் மேற்கொண்டு நோயினை முழுவதுமாக கட்டுப்படுத்தப்பட்டது. இதற்கென 21 புதிய புகை தெளிப்பான் இயந்திரங்கள் தருவித்து கொள்ளப்பட்டு அவ்வப்போது நாகப்பட்டினம் மற்றும் நாகூர் நகர பகுதிகளில் தொடர்ந்து சுழற்சி முறையில் புகை மருந்து அடிக்கப்பட்டது. (1 முதல் 36 வார்டுகள்)

தேதிய குடற்புழு தினம் ஆண்டுக்கு இரண்டு முறை பூச்சி மாத்திரை 85,758 பள்ளி குழந்தைகளுக்கும் மற்றும் 20–30 வயது பெண்களுக்கு 11,984 பூச்சி மாத்திரைகள் வழங்கப்பட்டுள்ளது.

**தேசிய போலியோ சொட்டு மருந்து திட்டம்**

பொதுசுகாதாரப்பணியின்கீழ் ஆண்டுதோறும் 0+5 வயது குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்கப்பட்டு வருகிறது. அதன்படி அறிக்கையாண்டில் அமைக்கப்பட்ட முகாம்களில் மாவட்ட ஆட்சித்தலைவரால் தொடங்கி வைக்கப்பட்டு 11,000 குழந்தைகள் இலக்காக நிர்ணயிக்கப்பட்டு போலியோ சொட்டு மருந்து அனைத்து குழந்தைகளுக்கும் விடுதலின்றி வழங்கப்பட்டது.

**NATIONAL PULSE POLIO PROGRAMME ACHIEVEMENT**

| TARGET CHILDREN (0–5 YEARS) | ACHIVEMENT | PERCENTAGE |
|---|---|---|
| 6,072 | 6,072 | 100% |

**விழா மற்றும் உற்சவம்**

இந்நகராட்சியில் எல்லைக்குட்பட்ட நாகூர் நகரப்பகுதியில் அளவாகியுள்ள நாகூர் ஆண்டவர் தர்கா கந்தூரி திருவிழா 14.12.2023 ஆம் தேதி முதல் 27.12.2023 ஆம் தேதி வரை சிறப்புடன் நடைபெற்றது. விழாவின் சிறப்பு நிகழ்ச்சியாக சந்தன க்கூடு உற்சவம் 23.12.2023 ஆம் தேதியில் சிறப்புடன் நடைபெற்றது. இவ்விழாவிற்கு வருகை தந்த பொதுமக்களுக்கும் யாத்தீகர்களுக்கும் கூடுதல் சுகாதார வசதிகள் நகராட்சியால் செய்து தரப்பட்டது. இவ்விழாவிற்காக நகராட்சி பொதுநிதியிலிருந்து ரூ.25.00 இலட்சம் மட்டும் செலவிடப்பட்டது அவ்வாறு செலவிடப்பட்ட செலவின தொகையில் நாகூர் தர்கா டிரஸ்டி நிறுவனத்தரால் 50 சதவீதம் தொகை ரூ.12.50 இலட்சம் மட்டும் வழங்க தெரிவிக்கப்பட்டது.

**பாதுக்காக்கப்பட்ட குடிநீர் திட்டம்**

அறிக்கையாண்டில் இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் நூறு ஆண்டுகளுக்கு மேலாக பதியப்பட்ட குடிநீர் பிரதான மற்றும் பகிர்மான குழாய்கள் பழுதடைந்த நிலையில் உள்ளதனை மாற்றி அமைப்பதற்கு அம்ரூட் 2.0 திட்டதின் கீழ் ரூ.6821.00 இலட்ச மதிப்பீட்டில் குடிநீர் மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு பணி நடைபெற்று வருகிறது. மேலும் இத்திட்டத்தில் கூடுதலாக மூன்று நீர்தேக்க தொட்டிகள் அமைக்கப்படவுள்ளது. இதனால் நகர மக்களின் குடிநீர் தேவைகளை 24x7 என்ற விகிதாச்சாரத்தில் வழங்கிட வகை செய்யப்பட்டுள்ளது, மேலும் தற்போது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மற்றும் நகராட்சியின் நீர் ஆதாரம் மூலம் இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கீழ்கண்ட மேல்நிலை தொட்டிகளிலிருந்து குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கீழ்கண்ட மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது.

| வ.எண் | மேல்நிலை நீர் தேக்க தொட்டி விவரம் | கொள்ளவு லட்சம் லிட்டர் |
|---|---|---|
| 1 | வண்டிபேட்டை நீர் தேக்க தொட்டி | 9.00 |
| 2 | பட்டினச்சேரி நீர் தேக்க தொட்டி | 3.00 |
| 3 | பால்பண்ணைச்சேரி நீர் தேக்க தொட்டி | 4.50 |
| 4 | சாமந்தான் பேட்டை நீர் தேக்க தொட்டி | 3.00 |
| 5 | புதிய நம்பியார் நகர் நீர் தேக்க தொட்டி | 2.50 |
| 6 | நம்பியார் நகர் நீர் தேக்க தொட்டி | 3.00 |
| 7 | வெளிப்பாளையம் நீர் தேக்க தொட்டி | 9.50 |
| 8 | வெளிப்பாளைம் புதிய நீர் தேக்க தொட்டி | 6.00 |
| 9 | சாலமன் பார்க் நீர் தேக்க தொட்டி | 20.00 |
| 10 | டாடா நகர் நீர் தேக்க தொட்டி | 2.50 |
| 11 | சேவாபாரதி நீர் தேக்க தொட்டி | 5.00 |
| 12 | சி.எஸ்.ஐ நீர் தேக்க தொட்டி | 2.50 |
| 13 | அக்கரைக்குளம் நீர் தேக்க தொட்டி | 2.50 |
| | **மொத்தம்** | **73.00** |

மேற்கண்ட 13 குடிநீர் மேல்நிலை தொட்டிகளின் மூலம் தினசரி காலையில் 2 மணி நேரம் ஒருநாள் விட்டு ஒருநாள் குடிநீர் வழங்கப்பட்டும், நாள் ஒன்றுக்கு 73.00 லட்சம் லிட்டர்கள் குடிநீர் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் 2023–2024 ஆம் ஆண்டில் குடிநீர் இணைப்புகளின் எண்ணிக்கை 11157 ஆகும். அறிக்கையாண்டில் 118 எண்ணிக்கைனில் புதிய குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்கப்பட் குடிநீர் குழாய் வீட்டு இணைப்புகள் வழங்கப்பட்டு வருகிறது.

**தேசிய நகர்புற வாழ்வாதாரத் திட்டம் (NULM)**

அறிக்கையாண்டில் SJSRY திட்டத்திற்கு பதிலாக தேசிய நகர்புற வாழ்வாதாரத்திட்டம் துவங்கப்பட்டு அத்திட்டத்தில் கீழ்கண்ட தலைப்புகளின் கீழ் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

| | | |
|---|---|---|
| **1** | EST & P | வேலை வாய்ப்புடன் கூடிய திறன் மேம்பாட்டு பயிற்சி |
| **2** | SEP | சுய வேலை வாய்ப்பு |
| **3** | SUH | நகர்ப்புற வீடற்றவர்களுக்கு வசதிகள் ஏற்படுத்துதல் |
| **4** | SUSV | நகர்ப்புற சாலையோர வியபாரிகளுக்கு வசதிகள் ஏற்படுத்துதல் |

**அம்மா உணவகங்கள்**

அரசு மருத்துவமனை அருகில் உள்ள அம்மா உணவகம் மற்றும் புதிய பேருந்து நிலையம் அருகில் உள்ள அம்மா உணவகம் என இரண்டு அம்மா உணவகங்கள் இயங்கி வருகின்றன. இரண்டு அம்மா உணவகங்கள் மகளிர் சுய உதவிக்குழு மூலம் செயல்பட்டு வருகிறது. மேற்படி உறுப்பினர் இங்கு இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து மாத ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது.

**மருத்துவ முகாம்**

நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட நகர் நல மையத்தில் குடிசைப்பகுதி மக்கள் பயன்பெறும் வகையில் மருத்துவ அலுவலர்களை கொண்டு மருத்து முகாம் நடத்தப்பட்டது. மேலும் தூய்மைப் பணியாளர்களுக்கான மருத்துவ முகாம் அமைத்து மருத்துவ முகாம் நடத்தப்பட்டது.

**பாதாள சாக்கடைத்திட்டம்**

மாவட்ட தலை நகரங்களில் பாதாள சாக்கடைத் திட்டத்தினை செயல்படுத்தப்பட வேண்டுமென அரசு அறிவித்துள்ள உறுதி மொழியின்படி நாகப்பட்டினம் நகரில் பாதாள சாக்கடை திட்டத்தினை செயல்படுத்திட ஆய்வு பணிகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினரால் மேற்கொள்ளப்பட்டு, இத்திட்டத்திற்கு ரூ.79.31கோடிக்கு திருத்திய மதிப்பீடு திட்டப்பணிகளில் நாகப்பட்டினம் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் பணி முடிக்கப்பட்டு கழிவு நீர் குழாய் வீட்டு இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளது. நாகூர் பகுதியில் உள்ள கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணி முடிக்கப்பட்டு கழிவு நீர் குழாய் விட்டு இணைப்புகள் வழங்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பாதாள சாக்கடை கழிவு நீர் குழாய் இணைப்பு பெற முன் வைப்பு தொகை வசூல் செய்திட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. மேலும் பாதாள சாக்கடை திட்டப்பணிகள் கழிவு நீர் குழாய் வீட்டு இணைப்புகள் நகராட்சி மூலம் வழங்குவதற்கு ரூ.447.60/- இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

கழிவு நீர் குழாய் வீட்டு இணைப்புகள் வழங்கப்பட்டு வருகிறது. 2023-2024 ஆம் ஆண்டு மார்ச் 31 வரை 7,009 எண்ணிக்கையிலான இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளது.

**தீத்தடுப்புத் திட்டம்**

தமிழக அரசின் தீ அணைப்புத் துறையினரால் நகரில் தீயணைப்பு பணிகள் செயல்பட்டு வருகிறது.

**வருவாய் தரத்தக்க இனங்கள்**

**பொது**

இந்நகராட்சியில் பணியாற்றும் பணியாளர்களுக்கு நகராட்சி காமராஜ் காலணியில் 16 வீடுகளும், பாரதி மார்க்கெட் காலணியில் 10 வீடுகளும் உள்ளன.

இந்நகராட்சியில் பணியாற்றும் எல்லா துப்புரவு பணியாளர்களும் அவர்களின் வாழ்க்கைத்தரத்திற்கேற்றவாறு எல்லா வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டு வருகின்றன. துப்புரவு பணியாளர்களுக்கென நாகை மருத்துக் கொத்தளம் தெரு, முனிசிபல் பேட்டை ஆகிய பகுதிகளிலும், நாகூர் குயவர் தெரு பகுதியிலும் துப்புரவு பணியாளர்களுக்கு வீடுகள் உள்ளன.

**போக்குவரத்து**

இந்நகராட்சி எல்லைக்குள் நாகூர், வெளிப்பாளையம் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய பகுதிகளில் இரயில் நிலையங்கள் அமைந்துள்ளன. இந்நகரத்திலிருந்து கோயம்புத்தூர், எர்ணாகுளம், சென்னை, தஞ்சாவூர், திருச்சி ஆகிய தொலைதூர பயணத்திற்கு வசதியாக உள்ளது.

இந்நகராட்சி எல்லைக்குள் வெளிப்பாளைம் அறிஞர் அண்ணா புதிய பேருந்து நிலையம் ஒன்றும், நாகூரில் அறிஞர் அண்ணா பேருந்து நிலையம் ஒன்றும் ஆக இரண்டு பேருந்து நிலையங்கள் உள்ளன.

நாகப்பட்டினம் நகரத்திலிருந்து வெளியூர்களுக்கு செல்லும் பேருந்துகள், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழகம், அரசு விரைவு போக்குவரத்துக்கழகம் மற்றும் தனியாராலும் நடத்தப்பட்டு வருகிறது.

இந்நகரத்திலிருந்து சென்னை, திருவனந்தபுரம், பெங்களூர் , கன்னியாகுமரி, திருப்பதி, தூத்துக்குடி, மதுரை, கோயம்புத்தூர், நாகர்கோயில், சேலம், பழநி, குளச்சல், வேலூர் இராமநாதபுரம், பாண்டிச்சேரி, சிதம்பரம், திருச்சி, தஞ்சாவூர், கும்பகோணம், மயிலாடுதுறை, வேதாரண்யம், ஆகிய தொலைதூர நகரம்புகளுக்கும் செல்கின்றன. குடந்தை அரசுபோக்குவரத்துத் துறையினரால் நகரப் பேருந்துகள் , நாகப்பட்டினம், நாகூர், வேளாங்கண்ணி, திருவாரூர், காரைக்கால், சிக்கல், எட்டுக்குடி, போன்ற அருகாமையில் உள்ள ஊர்களுக்கும் செல்கின்றன.

**நகரமைப்புத் திட்டங்கள்**

அரசு உத்திரவு எண் 650, நாள் 08.04.1975ன் படியும் தமிழ்நாடு நகர் மற்றும் ஊரக வளர்ச்சிச் சட்டம் 11(எ)ன்படியும் இந்நகராட்சிக்கு உள்ளூர் அமைப்பு திட்டக்குழு நியமிக்கப்பட்டு உள்ளது. நாகப்பட்டினம் நகரத் திட்ட பரப்பு சுமார் 5.49 மையில்களாகும். இந்த திட்ட பகுதியில் 11 பிரிவு அபிவிருத்தித்திட்டங்கள் உள்ளன.

1. **விரிவு அபிவிருத்தித் திட்டம் எண்1**

இத்திட்டம் 88.16 ஏக்கர் பரப்பளவு கொண்டது. அரசு வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை 1451 நாள் 15–12–1959–ல் அங்கீகரிக்கப்பட்ட திட்ட விதிகள் கடைபிடிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

2. **விரிவு அபிவிருத்தித் திட்டம் எண் 2**

இத்திட்டம் 121.80 ஏக்கர் பரப்பளவு கொண்டது. அரசு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை நாள் 15–12–1960–ல் அங்கீகரிக்கப்பட்டது. திட்ட விதிகள் கடைப்பிடிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

**3. விரிவு அபிவிருத்தித் திட்டம் எண் 3**

இத்திட்டம் அரசால் அங்கீகரிக்கப்பட்டு திட்டவிதிகள் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. அரசாணை எண் 805, நாள் 27–03–1974.

**4.விரிவு அபிவிருத்தித் திட்டம் எண் 4**

விரிவு அபிவிருத்தித் திட்ட விதிகள் 17(2)1 மற்றும் 3ன்படியும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மாவட்ட ஆட்சியாளர் அலுவலகத்திலும், நகராட்சி அலுவலகத்திலும் விளம்பரப்பலகையில் ஒட்டி 02–09–2003ல் விளம்பரம் செய்யப்பட்டது. இந்த விபரத்தினை மேல்நடவடிக்கைக்காக திருச்சி நகர ஊரமைப்பு இயக்குநருக்கு தெரிவிக்கப்பட்டது.

**5. விரிவு அபிவிருத்தித் திட்டம் எண் 5**

விரிவு அபிவிருத்தித் திட்டம் 17ன்படியும் 1971ம் வருடம் நகரமைப்புச் சட்டம் 29ன்படியும் படிவம் 12யை இதழில் பிரசுரிக்க படிவம் 12யை தினகரன் நாளிதழில் பிரசுரிக்கபட்டது. மேலும், தமிழ்நாடு அரசு இதழில் பிரசுரிக்கப்பட்டுளது.

**6. விரிவு அபிவிருத்தித் திட்டம் எண் 6**

இத்திட்டம் 188.792 ஏக்கர் பரப்பளவு கொண்டது. அரசு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அரசாணை எண்.805, நாள் 27.03.1974ல் திட்டம் அங்கீகரிக்கப்பட்டது. திட்ட விதிகள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

**7. விரிவு அபிவிருத்தித் திட்டம் எண் 7**

விரிவு அபிவிருத்தித் திட்டப்பணி 17–ன்படியும் 1971ல் வருடம் நகரமைப்புச் சட்டம் 29ன்படியும் படிவம் 12யை தினத்தந்தி நாளேட்டில் 20–09–1992 பிரசுரிக்கப்பட்டது. மேலும், தமிழ்நாடு அரசிதழில் படிவம் 12யை பிரசுரிக்கப்பட்டுளளது.

**8. விரிவு அபிவிருத்தித் திட்டம் எண் 8**

விரிவு அபிவிருத்தி திட்டப்பணி 17–ன்படியும் 1971–ல் வருடம் நகரமைப்புச் சட்டம் 29ன்படியும் படிவம் 12யை தினத்தந்தி நாளேட்டில் 20–09–1993ம் தேதி பிரசுரிக்கப்பட்டது. மேலும், தமிழ்நாடு அரசிதழில் படிவம் 12யை பிரசுரிக்கப்பட்டுளளது.

**9. விரிவு அபிவிருத்தித் திட்டம் எண் 9**

இந்த இடம் 2,84,558 ஏக்கர் பரப்பளவு உள்ள டி.டி.பி/.டி.டி.டி.சி எண் 12/1990ல் வரைப்படம் ஒப்புதல் பெறப்பட்டு மேல் நடவடிக்கையில் உள்ளது. தினகரன் நாளிதழில்20–05–1994ல் பிரசுரிக்கப்பட்டு தமிழ்நாடு அரசிதழில் பிரசுரிக்கப்பட்டுளளது.

**தாமரைக்குளம் விரிவு அபிவிருத்திட்டம் பகுதி எண் 1.**

இத்திட்டம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இந்த திட்டம் திட்ட விதிகளுக்கு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

**தாமரைக்குளம் அபிவிருத்திதிட்டம் பகுதி எண் 2**

இந்த திட்டம் 99.716 ஏக்கர் பரப்பளவு கொண்டது. இந்த திட்டம் அங்கீகரிக்கப்பட்டு திட்டவிதிகள் முறைப்படுத்தப்பட்டு வருகிறது.

**கடற்கரை பகுதி கட்டுப்பாட்டுத் திட்டம் ( சி.ஆர்.இசட்)**

இத்திட்டத்தின் கீழ் முறைப்படுத்துதல் பாதுகாப்புச் சட்டம் 1980ன்படி கடற்கரையிலிருந்து 500 மீட்டர் தூரத்திற்கு உள்ள பகுதிகள் ஒழுங்குபடுத்துதல் சம்பந்தமாக சர்வே அண்ணா பல்கலைக்கழகம் மூலம் எடுத்து நகர் ஊரமைப்பு துறை மூலம் அங்கீகரிக்கப்பட்ட வரைப்பட புல எண்கள் தயாரிக்கப்பட்டுள்ள தகவல் கிடைக்கப்பெற்றுள்ளது. ஆனால், அங்கீகரிக்கப்பட்ட ஒழுங்குப்படுத்தப்பட்ட கடற்கரை ஒழுங் கு படுத்துதல் பகுதி வரைப்படம் நகர் ஊரமைப்புத்துறையிடம் வரைபடம் பெற்று அதன்படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அரசு உத்திரவு எண் 650 நாள் 08–04–1975ன்படி தமிழ்நாடு நகர் மற்றும் ஊரக வளர்ச்சி சட்டம் 11(எ)ன்படியும் இந்நகராட்சிக்கு உள்ளூர் அமைப்புத் திட்டக்குழு நியமிக்கப்பட்டு உள்ளது.

இத்திட்ட பகுதியில் 11 அபிவிருத்தித் திட்டங்கள் உள்ளது. இதில் அங்கீகரிக்கப்பட்ட திட்டம் 1 முதல் 9 மற்றும் தாமரைக்குளம் விரிவு அபிவிருத்தி திட்டம் 1 முதல் 9 மற்றும் தாமரைக்குளம் விரிவு அபிவிருத்தித் திட்டம் எண் 1 மற்றும் திட்டம் எண் 2ல் திட்ட விதிகள் கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

**ஆக்கிரமிப்புகள்**

ஆரம்பத்தில் எண்ணிக்கை : 192
நடப்பு ஆண்டில் அகற்றப்பட்டது : 161

**கட்டட மனுக்கள்**

1. அறிக்கையாண்டில் வரப்பெற்ற மனுக்கள் : 191
2. முடிவு செய்யப்பட்டவை : 149
3. அனுமதிக்கப்பட்டவை : 149
4. அனுமதி மறுக்கப்பட்டது : 42

**அனுமதி இல்லாமல் நடைபெறும் கட்டுமானம்**

1. அனுமதியற்ற கட்டுமானங்கள் : 36
2. அதில் அனுமதி பெற்றவை : 22

**மனைப்பிரிவுகள்**

1. வரப்பெற்ற மனைப்பிரிவு விண்ணப்பங்கள் : இல்லை
2. நகர ஊரமைப்பு இயக்குநர் அவர்களுக்கு ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டது. : இல்லை
3. ஒப்புதல் பெறப்பட்டது : இல்லை
4. ஒப்புதல் நிலுவை : இல்லை

**வரிகள் மற்றும் வரியில்லா இனங்கள்**

சொத்துவரி, குடிநீர் கட்டணம், பாதாள சாக்கடை கட்டணம், தொழில்வரி கட்டணம் மற்றும் வரியில்லா இனங்கள் கட்டணம் ஆகிய வரியினங்களுக்கு 01-08-2003 ஆம் தேதி முதல் கணிணி மயமாக்கப்பட்டு ரசீதுகள் வழங்கப்பட்டு வருகிறது.

**வரியினங்கள் வசூல் செய்யப்பட்ட விபரம்.**

| வ.எண் | இனம் | கேட்பு | வசூல் | நிலுவை | சதவீதம் ரூ. |
|---|---|---|---|---|---|
| 1 | சொத்துவரி | 1152.20 | 133.03 | 1019.17 | 21.47 |
| 2 | தொழில் வரி | 158.80 | 6.78 | 152.02 | 4.27 |
| 3 | குடிநீர் கட்டணம் | 244.59 | 5.88 | 238.72 | 2.40 |
| 4 | வரியில்லா இனம் | 108.60 | 11.12 | 97.48 | 10.24 |
| 5 | பாதாள சாக்கடை இணைப்பு கட்டணம் | 244.19 | 8.73 | 234.46 | 3.59 |

**வரியில்லா இனம்**

இந்நகராட்சியில் பலன் தரத் தக்க இனங்களின் கீழ் ஓராண்டு குத்தகை இனங்களான பேருந்து நிலையக் கடைகள் காந்தி மார்க்கெட் கடைகள், ஆசாத் மார்க்கெட் கடைகள், பாரதி மார்க்கெட் கடைகள், காய்கறி மற்றும் மீன் மார்க்கெட் கடைகள், கட்டண கழிவறைகள் ஆகியவை நடப்பாண்டில் ஆண்டில் கீழ்க்கண்ட விபரப்படி வருமானம் வரப்பெற்றது.

| வ.எ | விபரம் | தொகை ரூ |
|---|---|---|
| 1 | பேருந்து நிலைய கட்டண வசூல் | 7,85,400 |
| 2 | மார்க்கெட் கட்டண வசூல் | 3,54,218 |
| 3 | அடிக்கடை கட்டண வசூல் | 23,62,500 |
| 4 | ஆடு அறுக்கும் தொட்டி கட்டண வசூல் | 1,33,000 |
| 5 | கட்டண கழிவறை கட்டண வசூல் | 21,47,000 |
| 6 | விழாக்களும், சந்தைகளும் | 3,84,431 |
| 7 | பலன் தரும் மரங்கள் | 13,755 |
| 8 | நிலக்குத்தகை | – |
| 9 | கடைகள் | 65,49,923 |
| 10 | பணியாளர்கள் குடியிருப்பு | – |
| 11 | வாகன பாதுகாப்பம் | 9,74,750 |
| | **கூடுதல் ரூ.** | **1,37,04,977** |

நகராட்சி பராமரிப்பின்கீழ் நாளது தேதி வரை வாரசந்தைகள் ஏதும் இல்லை.

அறிக்கையாண்டிற்கான வருடாந்திர குத்தகை இனங்கள் மூலம் ரூ.1,37,04,977/–மட்டும் வருவாய் பெறப்பட்டது.

**மூலதனச்செலவுகள் விபரம்**

| நிதி விவரங்கள் | தொகை ரூ. |
|---|---|
| மூலதனச் செலவுகள் | 77.53 |
| பொது நிதி | 3400.95 |
| குடிநீர் நிதி | 522.10 |
| ஆரம்ப கல்வி நிதி | 31.65 |
| மொத்தம் ரூ. | **4032.23** |

**சேம நலநிதி வரவு செலவு விபரம்**

| வ.எ | நிதி | வரவு | செலவு |
|---|---|---|---|
| 1 | **சேமநலநிதி** | **62,53,700** | **6,67,833** |

**கடன்கள்**

இந்நகராட்சியில் ஐ.டி.எஸ்.எம்.டி. திட்டத்தின்கீழ் பெறப்பட்ட கடன்களுக்கு அசல் மற்றும் வட்டித் தொகை முழுவதும் செலுத்தப்பட்டு விட்டது.

பாதாள சாக்கடை திட்டத்தின்கீழ் பெறப்பட்ட கடன் தொகை ரூ.8,20,60,000/–இல் அசல் பெறப்பட்டதில் மாநில நிதிக்குழு நிலுவைத்தொகையில் அசல் மற்றும் வட்டித்தொகை ரூ.6,12,74,553/ – பிடித்தம் செய்யப்பட்டுவிட்டது. மேலும் இத்திட்டத்திற்கான கடன் செலுத்தப்பட வேண்டிய நிலுவைத்தொகைகள் கடன் எண்.1771 –இல் அசல் தொகை ரூ.7,05,71,909/– மற்றும் வட்டித்தொகை ரூ. 7,05,71,909/– மட்டும் நிலுவையில் உள்ளது. மேலும், இத்தொகையினை செலுத்த நகராட்சியின் நிதி நிலைமைகேற்ப செலுத்தப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு நகர்புர நிதி கட்டமைப்பு மேம்பாட்டுக்கழகம் (TUFIDCO) சென்னை அலுவலகம் மூலம் IUDM திட்டத்தின் கீழ் பெறப்பட்ட வட்டியில்லா கடன் 5,27,04,713/– மட்டும் பெறப்பட்டதில் மாநில நிதிக்குழு பிடித்தம் செய்யப்பட்ட தொகை ரூ.59,48,713/– மட்டும் பிடித்தம் செய்யப்பட்டுள்ளது . மீதமுள்ள தொகை ரூ.4,67,56,000/– ஐ மட்டும் நிலுவையில் உள்ளது.

தமிழ்நாடு நகர்புற நிதி கட்டமைப்பு மேம்பாட்டுக்கழகம் (TUFIDCO) சென்னை அலுவலகம் மூலம் பாதாள சாக்கடை கழிவு நீர் குழாய் அமைக்கும் பணிகளுக்கு (Provision of Internal Plumbing) அனைத்து வீடுகளுக்கும் இணைப்பு வழங்கும் பணிக்காக வட்டியில்லா கடன் தொகை ரூ.4,16,41,000/- மட்டும் அனுமதிக்கப்பட்டதில் மூன்று தவணைத்தொகை ரூ.1,01,20,391/- மட்டும் பெறப்பட்டுள்ளது. மேற்படி திட்டத்தின் கீழ் பெறப்பட்ட கடன்களுக்கான அசல் தொகைகள மட்டும் ரூ.3,99,01,858 பிடித்தம் செய்யப்பட்டுள்ளது.

மேலும், அக்கரைக்குளம் மேம்பாட்டு திட்டப்பணிக்கு TNUDF, Chennai இல் அலுவலகம் மூலம் மொத்தகடன் தொகை ரூ.63,00,000/- பெறப்பட்டதில் அசல் தொகை ரூ.1576345/- வட்டித்தொகைகள் ரூ.1679385/- 2023-24 நிதியாண்டில் செலுத்தப்பட்டுளளது. மேலும், மீதமுள்ள நிலுவைத்தொகையினை இந்நகராட்சியின நிதி நிலைக்கேற்ப செலுத்தப்பட்டு வருகிறது.

**வழக்குகள்**

| வரி மற்றும் வரியில்லா இனம் | இதர இனங்கள் | மொத்தம் |
|---|---|---|
| **35** | **16** | **51** |

**தணிக்கைத்தடைகள்**

இந்நகராட்சியில் நடப்பு நிதியாண்டில் தணிக்கை 2023-2024 வரை முடிவடைந்துள்ளது. அறிக்கை ஆண்டில் 438 தணிக்கைத் தடைகள் நிலுவையில் உள்ளது. இத்தணிக்கைத் தடைகளை நிவர்த்தி செய்வதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**மக்கள் சாசனத்தின் குறிக்கோள் :**

1. சேவைகளை விரைவாகவும் தரமுடனும் அளித்தல்
2. சேவைகளை வழங்குவதற்கான கால அளவுகளைத்தெளிவாக அறிவித்தல்
3. நுகர்வோரின் நம்பிக்கை பெறும் வகையில் வெளிப்படையான நிர்வாகத்தை மேம்படுத்துதல்

பல்வேறு சேவை பணிகளுக்கும் கால அட்டவணைகள் மக்கள் சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் சேவைகளை நிறைவேற்ற அனைத்து செயல்பாடுகளும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

**தகவல் மையம்**

மக்கள் சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பொது சேவைக்கான குறிக்கோள்களை விரைந்து நடைமுறைப்படுத்த ஏதுவாக நகராட்சியில் தகவல் மையம் ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. தகவல் மையத்தின் மூலம் நகராட்சிக்கு பல்வேறு சேவைகள் தொடர்பாக வருவோருக்கு உரிய நேரத்தில் வழங்கப்பட்டு வருகின்றன. சொத்து வரி ரசீதுகள் 01-08-2003 முதல் கணினி மூலம் வழங்கப்பட்டு வருகிறது. தகவல் மையம் மற்றும் கணினி மையம் தோற்றுவிக்கப்பட்டதன் மூலம் நகராட்சியின் பொது சேவையின் செயல்பாடு மேம்பட்டுள்ளது.

**கணினிப்பிரிவு**

நகராட்சியின் செயல்பாடுகள் அனைத்தையும் கணிப்பொறி மூலம் செயல்படும் திட்டத்தின் கீழ் இந்நகராட்சிக்கு கணிப்பொறிகள் வழங்கப்பட்டு கணிப்பொறிகள் இயக்கப்பட்டு வருகிறது. இந்நகராட்சியை பொறுத்த மட்டில் அன்றாட அலுவல்கள் அனைத்தும் தற்போது கணிப்பொறியிலேயே நகல் எடுக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. Commr.nagapattinam@tn.gov.in என்ற இ.மெயில் முகவரி மூலம் நகராட்சியின் தகவல் பரிமாற்றங்கள் நடைபெறுகின்றன. மேலும் நகராட்சி மூலம் செய்யப்படும் திட்டப்பணிகள் ரூபாய் ஒரு இலட்சத்திகு மேல் உள்ளவை அனைத்தும் பிடிஎப் மூலம் இணையதளத்தில் http://municipality.tn.gov.in/tenders ரூபாய் பத்து இலட்சம் மற்றும் பத்து இலட்சத்திற்கு மேல் உள்ளவை அனைத்தும் http:www.tenders.tn.gov.in என்ற இணையதளத்தில் வெளியிடப்படுகிறது. கணிணிப்பிரிவிற்கென்று உதவித் திட்ட அமைப்பாளர் ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

**நாகப்பட்டினம் நகராட்சி**

**2023–2024 ஆம் ஆண்டில் அனுமதிக்கப்பட்டு**

**நடைபெற்று வரும் திட்டப்பணிகள் விவரம்**

| வ.எ | திட்டத்தின் பெயர் | பணியின் விவரம் | பணிகளின் எண்ணிக்கை | மதிப்பீட்டு தொகை (ரூ. கோடியில்) | தற்போதைய நிலை |
|---|---|---|---|---|---|
| 1 | அம்ரூட் | குடிநீர் பணி | 1 | 68.21 | குழாய் பதிக்கும் பணி நடைபெற்று வருகிறது |
| 2 | 15வது நிதிக்குழு மான்யம் – சுகாதாரம் | நாகூர் பழைய நம்பியாரில் ஆரம்ப துணை சுகாதார நிலையம் கட்டும் பணி | 1 | 0.30 | லின்டல் அளவிற்கு மேல் செங்கல் கட்டும் பணி நடைபெற்று வருகிறது |
| 3 | | மருதுகொட்டளம் ரோடு நகரில் ஆரம்ப துணை சுகாதார நிலையம் கட்டும் பணி | 1 | 0.30 | வர்ணபூச்சு பணி நடைபெற்று வருகிறது |
| 4 | | அரசு மருத்துவமனையில் கூடுதல் கட்டிடம் கட்டும் பணி | 1 | 5.00 | அஸ்திவாரம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது |
| 5 | 15வது நிதிக்குழு மான்யம் – சுகாதாரம் | நாகூரில் ஆரம்ப சுகாதார நிலையம் கட்டும் பணி | 1 | 1.20 | பூச்சு பணி நடைபெற்று வருகிறது |
| | | **மொத்தம்** | **5** | **75.01** | |

**தெரிந்த இனத்தொடு தேர்ந்தெண்ணிச் செய்வார்க்கு**
**அரும்பொருள் யாதொன்றும் இல். – குறள்.**

**பொருள்: செயலைப்பற்றி அறிந்த வல்லுனர்களுடன் சேர்ந்து**
**ஆராய்ந்து சிந்தித்து ஒருசெயலைச் செய்ய**
**தொடங்கினால் வெற்றி சுலபத்தில் கிடைக்கும்.**

அறிக்கையாண்டில் நகராட்சியின் பல்வேறு பணிகளையும் சீரோடும், சிறப்போடும் செயல்படுத்தி அதன் பயன்கள் பொதுமக்களுக்கு சென்றடைவதற்கு நகராட்சியின் பணிகளை நிறைவேற்றிட பணியாற்றி வரும் நகராட்சி பொறியாளர், நகர்நல அலுவலர், மேலாளர், இளநிலைப் பொறியாளர், நகரமைப்பு அலுவலர், நகரமைப்பு ஆய்வர்கள், நகர சார் ஆய்வாளர், துப்புரவு ஆய்வர்கள், வருவாய் ஆய்வர்கள், சிறப்பு வருவாய் ஆய்வர், வருவாய் உதவியாளர்கள் மற்றும் தூய்மைப்பணியாளர்கள் உட்பட அனைத்து பிரிவு உள்(ம)வெளிப்புற பணியாளர்கள் அனைவருக்கும் பாராட்டுக்களையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆணையர் 30/6/2025
நாகப்பட்டினம் நகராட்சி

30/6/2025